**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 235 **நாள் :** 25.08.2025

**பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் சென்னை மேல்நிலைப்பள்ளிகளில், 2025-26ஆம் கல்வியாண்டில் ஏற்பட்டுள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் காலிப்பணியிடங்களை அலகு விட்டு அலகு மாறுதல் வழியாக நிரப்பிட 26.08.2025 முதல் 02.09.2025 வரை (6 நாட்கள்) விண்ணப்பங்களை அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அனுப்பிட தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் சென்னை மேல்நிலைப்பள்ளிகளில், 2025-26ஆம் கல்வியாண்டில் ஏற்பட்டுள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் காலிப்பணியிடங்களை அலகு விட்டு அலகு மாறுதல் வழியாக நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை மாவட்டம், பிற மாவட்டங்கள் மற்றும் பிற துறைகளில் விருப்பம் உள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நேரடியாக அல்லது தபால் வழியாக 26.08.2025 முதல் 02.09.2025 வரை (6 நாட்கள்) தங்கள் விண்ணப்பங்களை அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிட அறிவுறுத்தப்பட்டு, அரசாணை எண்.176 பள்ளிக் கல்வித் துறை, நாள் : 17.12.2021ல் தெரிவித்துள்ளதின்படி, 06.09.2025 அன்று ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெறவுள்ள அலகு விட்டு அலகு மாறுதல் கலந்தாய்வில் அந்தந்த துறையினை சேர்ந்த உரிய துறை தலைவரிடம் தடையின்மைச் சான்றிதழினை பெற்று (NOC) கலந்து கொள்ளலாம்.

இதுதொடர்பாக, கூடுதல் விவரங்களை 044-2561 9462 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**